[டாக்டர் மு. கருணாநிதி]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ் நாடு 1972-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்த (நிலவுடைமைக்கு உச்ச வரம்பு வரையறுத்தல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவை இப் **பேரவையின்** முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பேரவைக்கு ஒரு **அறிவிப்பு.**

தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கு தமிழக ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார் கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, மோட்டார் வாகனங்கள் **வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவை இப் பேரவையின் முன்** அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் **வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவை இப் பேரவையின் முன்** அறிமுகப்படுத்துகிறேன்.